**செய்தி வெளியீடு எண்.41** **நாள்.20.1.2009**

**ஹேபியஸ் கார்பஸ் மனுக்கள் மூலம் குற்றவாளிகள் விடுதலையானாலும், அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கை தொடர வேண்டும் – மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் ஆணை**

குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையின் 2008–ம் ஆண்டின் செயல்பாடுகள் மற்றும் 2009–ம் ஆண்டில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. எ.வ. வேலு அவர்கள் இன்று (20.01.2009) காலை 10.30 மணிக்கு தலைமைச் செயலகத்தில் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத் துறை உயர் அலுவலர்களுடன் தீவிர ஆலோசனை நடத்தினார்கள்.

ஆய்வுக் கூட்டத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள் உரையாற்றுகையில் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் 2008–ம் ஆண்டில் கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் 135 குற்றவாளிகள் 6 மாத தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். பொது விநியோகத் திட்டத்தின் மூலம் நியாயவிலைக் கடைகளில் அரசு மானியத்துடன் வழங்கப்படும் அரிசியை சமூக விரோதிகள் கடத்தி முறையற்ற வகையில் விற்பனை செய்யக்கூடாது என்பதற்காக தான் 135 குற்றவாளிகள் கைது செய்யப்பட்டுள்ளனர். கள்ளச்சந்தை தடுப்புக் காவல் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டு 6 மாதம் கழித்து விடுதலை செய்யப்பட்ட பின்னர் அவர்களுடைய நடவடிக்கைகளை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என்றும் அரிசி கடத்தலில் ஈடுபடும் லாரிகளின் உரிமங்களை ரத்து செய்யவும், ஓட்டுனர்களின் உரிமத்தினை ரத்து செய்யவும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்கள்.

தவிர்க்க முடியாத சிறு சிறு காரணங்களால் குற்றவாளிகளை நீதிமன்றம் விடுதலை செய்தாலும், அவர்கள் செய்த குற்றங்களுக்காக அத்தியாவசியப் பண்டங்கள் சட்டத்தின் கீழ் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்து தொடர்ந்து வழக்குகளை நடத்த வேண்டும். குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலர்கள் குற்றவாளிகளை கைது செய்தால் மட்டும் போதாது. குற்றவாளிகளுக்கு நீதிமன்றம் மூலம் இன்றியமையாப் பண்டங்கள் சட்டம், 1955-ன் கீழ் உரிய தண்டனை பெற்று தர வேண்டியதும் இவர்களுடைய பொறுப்பாகும். குற்றவாளிகள் சட்ட நுணுக்கங்களை பயன்படுத்தி சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிச் செல்ல நேர்ந்தால் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். அரிசி கடத்தலை தடுக்க இரயில்வே துறை ஊழியர்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டி சம்பந்தப்பட்ட உயர் அலுவலர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. எல்லையோர மாவட்டங்களில் இரவு ரோந்துப் பணி தீவிரப்டுத்தப்பட வேண்டும். இரவு ரோந்துப் பணியை தீவிரப்படுத்தினால் தான் எல்லையோர மாவட்டங்களில் இரவு நேரங்களில் சமூகவிரோதிகள் பிற மாவட்டங்களுக்கு அரிசி கடத்தி செல்வதை தடுக்க முடியும். தேனி மாவட்டத்தில் கழுதைகளின் மீது அரிசி கடத்துபவர்கள் மீதும் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். காவல்துறைத்

**தலைவர் அவலகத்திலுள்ள கட்டுப்பாட்டு அறைகளில் பெறப்படும் புகார் மனுக்கள் மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். பொது விநியோகத் திட்டப் பொருட்களை கடத்தும் தொழிலில் தனி நபர்கள் அல்லாமல் ஒரு சில சட்டவிரோத கும்பல்களும் கூட்டு முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதால் இத்தகைய கடத்தல் கும்பல்களை கண்டறிந்து அதன் கடத்தல் செயல்பாடுகளை முற்றிலும் முறியடிக்க தக்க உளவு, கைது மற்றும் தடுப்புக்காவல் நடவடிக்கைகளை தீவிரபடுத்த குடிமைப்பொருள் குற்றப்புலனாய்வுத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.**

**ஆய்வுக் கூட்டத்தில் திரு. க. சண்முகம், இ.ஆ.ப., செயலாளர், கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. க. இராஜாரமன், இ.ஆ.ப., ஆணையாளர், உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, திரு. சத்ய ப்ரதா சாகு, இ.ஆ.ப., நிர்வாக இயக்குநர், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், திரு. கா. பாலச்சந்திரன், இ.ஆ.ப., கூட்டுறவு சங்கங்களின் கூடுதல் பதிவாளர், திரு. இரா. சேகர், இ.கா.ப., கூடுதல் காவல்துறை இயக்குநர், திரு. ஆஸிஷ் பாங்க்ரா, இ.கா.ப., காவல்துறை தலைவைர், திரு. அபய் குமார் சிங், இ.கா.ப., இரயில்வே காவல்துறை துணைத் தலைவர், காவல் துறை கண்காணிப்பாளர்கள், துணைக் கண்காணிப்பாளர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.**

*****

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.